பெரியவா சரணம்.

Periyava sloka to chant before we leave our house This is similar to “apathaam apaharthaaram…”

காஞ்சி மாமுனிவரோ, சாதி, சமய, சமுதாயங்களைக் கடந்து இருக்கும் பேரருள். அதனால், அவரைக் கருத்தில் கொண்டு, எழுதிய வழித்துணை வேண்டுதல் இதோ:

போகுமெம் வழியிலே யாதொரு தடையுமோ ஆகாத செயல்களோ
கெடுதலோ தீமையோ இல்லாது ஆக்கிடு.
செல்லும் வழியதைச்சீராக்கிக் காத்திடு! சங்கரா! ஸத்யனே
நாராயணா! நாங்கள் நம்பிடும் தேவனே காஞ்சிமா முனிவனே ஸ்ரீராம சந்த்ரனே

## Sri Guru Paduka Stotram

இதை பிரதி தினமும் பாராயணம் செய்வதால் குரு பக்தி கைகூடும். ஜகத்குருவான ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவாளின் அருளைப் பெற்று, இகபர லாபங்களை அடைந்து ஸ்ரேயஸை பெற வேண்டுகிறேன்.

அனந்த ஸம்ஸார ஸமுத்ரதாரா
நௌகாயி தாப்யாம், குருபக்தி தாப்யாம்
வைராக்ய ஸாம்ரஜ்யத பூஜநாப்யாம்
நமோ நம: ஸ்ரீ குருபாதுகாப்யாம் ||

*எல்லையற்ற வாழ்க்கையெனும் கடலைத் தாண்டுவிக்கும் படகாயும், குருவிடம் பக்தியைத் தரக்கூடியதாகவும், வைராக்யம் என்ற சாம்ராஜ்யத்தைக் கொடுக்கிறதாயும், பூஜிக்கத் தகுந்ததாயும் உள்ள ஸ்ரீகுருவின் பாதுகைகளுக்கு நமஸ்காரம்! நமஸ்காரம்!*

கவித்வவாராசினி ஸாகராப்யாம்
தௌர்பாகய் தாவாம்புத பாலிகாப்யாம்
தூரீக்ருதா நம்ர விபத்ததிப்யாம்
நமோ நம: ஸ்ரீ குருபாதுகாப்யாம ||

*கவித்துவமென்னும் கடலை பொங்கச் செய்கின்ற சந்திரனாகவும், துன்பமென்னும் காட்டுத்தீயை அணைக்கும் மேகக்கூட்டமாகவும், தன்னை வணங்கியவர்களின் துன்பங்களை போக்குகின்றதாகவும் உள்ள ஸ்ரீகுருவின் பாதுகைகளுக்கு நமஸ்காரம்! நமஸ்காரம்!!*

நதா யயோ: ஸ்ரீ பதிதாம் ஸமீயு:
கதாசிதப்யாசு தரித்ரவர்யா:
மூகாஸ்ச வாசஸ்பதிதாம் ஹிதாப்யாம்
நமோ நம: ஸ்ரீ குரு பாதுகாப்யாம் ||

*மிகவும் ஏழ்மையானவர்கள் கூட எப்பொழுதாவது எந்த குருவின் பாதுகைகளை வணங்கிய உடனே செல்வந்தர்களாக ஆகிறார்களோ, எந்த பாதுகைகளை வணங்கிய ஊமைகள் கூட ப்ரஹஸ்பதிக்கு நிகரான சொல்லாற்றல் பெற்றவர்களாய் ஆகிறார்களோ, அவ்விதம் பெருமை வாய்ந்த, நன்மைகளைத் தரக்கூடிய ஸ்ரீ குருவின் பாதுகைகளுக்கு நமஸ்காரம்! நமஸ்காரம்!!*

நாலீக நீகாஸ பதாஹ்ருதாப்யாம்
நாநாவிமேஹாதி நிவார்காப்யாம்

நமஜ்ஜனாபீஷ்ட ததிரதாப்யாம்
நமோ நம: ஸ்ரீ குரு பாதுகாப்யாம் ||
*தாமரைக்கு நிகரானதாயும், பலவித மயக்கங்களை (மோஹங்களை) போக்கக்கூடியதாயும் தன்னை வணங்கியவர்களுக்கு விரும்பியவற்றை தரக்கூடியதாயும் உள்ள, ஸ்ரீ குருவின் பாதுகைகளுக்கு நமஸ்காரம்! நமஸ்காரம்!!*

ந்ருபாசி பௌலீவ்ரஜரத்னகாந்தி
ஸரித் விராஜத் ஜஹகன்யகாப்யாம்
ந்ருபத்வதாப்யாம், நதலோகபங்க்தே
நமோ நம: ஸ்ரீ குரு பாதுகாப்யாம் ||
*அரசர்களின் கிரீடங்களில் ஒளி வீசுகின்ற சிறந்த ரத்தினங்களின் ப்ரகாசமாகிய ஆற்றல் (நதியில்) அழகுடன் விளங்குகின்ற பெண் மீங்கள் போன்றதாயும், தன்னை வணங்குகிறவர்களுக்கு அரசனாயிருக்கும் நன்மையைக் கொடுக்கக் கூடியதாயும் உள்ள ஸ்ரீகுருவின் பாதுகைகளுக்கு நமஸ்காரம்! நமஸ்காரம்!!*

பாபந்தகார்க்க பரம்பராப்யாம்
தபாத்ரயாஹீந்த்ர ககேஷ்வராப்யாம்
ஜாட்யாப்தி சம்ஷோஷணவாடவாப்யாம்
நமோ நம: ஸ்ரீ குருபாதுபாக்யாம் ||
*பாவமாகிய இருளைப் போக்கும் சூரியன் போன்றதாயும், மூன்றுவித தாபங்களாகிய ஆதிபௌதிக, ஆதிதெய்வீக, ஆத்யாத்மிக பாம்புகளை அழிக்கின்ற கருடன் போன்றும், அக்ஞானமாகிய (மூடத்தன்மை) சமுத்ரத்தை வற்றச் செய்கின்ற வாடவாக்னியாகவும் விளங்குகின்ற ஸ்ரீ குரு பாதுகைகளுக்கு நமஸ்காரம்! நமஸ்காரம்!!*
*குறிப்பு:*
*ஆதிபுதிகம் : மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை ஆகிய ஈஷணாத்ரயம்*
*ஆதிதெய்வீகம் : தேவரிணம், ரிஷிரிணம், பித்ருரிணம் ஆகிய ரிணத்ரயம்*
*ஆத்யாத்மிகம்: சத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய குணத்ரயம்*
*மேற்சொன்னவை எல்லாம் தனியாகவோ சேர்ந்தோ பிறவிக்குக் காரணமாகிறது*

சமாதி ஷட்சுப்ரத வைபவாப்யாம்
சமாதிதானவ்ரத தீக்ஷிதாப்யாம்
ரமாதவான்ரிஸ்திர பக்திதாப்யாம்
நமோ நம: ஸ்ரீ குருபாதுகாப்யாம் ||

*ஞானிக்கு வேண்டிய சமம் முதலிய ஆறு குணங்களைக் கொடுக்கும் பெருமை வாய்ந்ததாயும், அவ்வாறு குணங்களுக்கு மூலமாகவுள்ள வ்ரதத்தை அருளக்கூடியாதாயும், ஸ்ரீமன் நாராயணனின் சரணாரவிந்தங்களில் நிலையான பக்தியைக் கொடுக்க கூடியதாயுமுள்ள ஸ்ரீ குருபாதுகைகளுக்கு நமஸ்காரம்! நமஸ்காரம்!!*

ஸ்வார்சாபராணாம் அகிலேஷ்டதாப்யாம்
ஸ்வாஹா ஸஹாயாக்ஷ துரந்தராப்யாம்

ஸ்வாந்தாஸ்ச பாவப்ரத பூஜனாப்யாம்
நமோ நம:ஸ்ரீ குருபாதுகாப்யாம் ||
*தனனி (பாதுகைகளை) பூஜிப்பதில் ஈடுபாடு கொண்டவர்களுக்கு அனைத்து விருப்பங்களையும் கொடுக்கக் கூடியதாகவும், தேவதைகளின் அனுக்ரகத்தை விரைவில் அளிக்கக்கூடியதாகவும், மனதிற்குத் தூய்மையான எண்ணத்தைத் தரக்கூடியதாயும் பூஜிக்கத் தகுந்த ஸ்ரீ குருபாதுகைகளுக்கு நமஸ்காரம்! நமஸ்காரம்!!*

காமாதிஸர்ப வ்ரஜகாருடாப்யாம்
விவேக வைராக்ய நிதிப்ரதாப்யாம்
போதப்ரதாப்யாம் த்ருதமோக்ஷதாப்யாம்
நமோ நம: ஸ்ரீ குருபாதுகாப்யாம் ||
*ஆசை முதலிய தீய குணங்களாகிய பாம்புகளை அழிக்கும் கருடனாகவும், விவேகம் (நன்மைகளை தீமைகளை அறிதல்) வைராக்யம் (பற்றின்மை), ஆகிய செல்வங்களை கொடுக்கக் கூடியதாயும், ப்ரம்ம ஞானத்தை அளிக்கக்கூடியதாயும், தன்னை (பாதுகைகளை) மனதில் சதா த்யானிப்பவர்களுக்கு மோக்ஷத்தை அளிக்கக் கூடியதாயும் உள்ள ஸ்ரீகுருவின் பாதுகைகளுக்கு நமஸ்காரம்! நமஸ்காரம்!!*

அனுதினமும் ஸ்ரீ ஜகத்குருவின் பாதுகைகளுக்கு நமஸ்கரித்து வாழ்வோம்! வாழ்விப்போம்!!

## THOTAKASHTAKAM

விதிதாகில சாஸ்த்ர ஸுதா ஜலதே,
மஹிதோபநிஷத்கதிதார்தநிதே |
ஹ்ருதயே கலயே விமலம் சரணம்,
பவ சங்கர தேசிக மே சரணம் || 1.

கருணா வருணாலய பாலய மாம்,
பவஸாகர து:க விதூநஹ்ருதம் |
ரசயாகில தர்சந்தத்வ விதம்,
பவ சங்கர தேசிக மே சரணம் || 2.

பவதா ஜநதா ஸுஹிதா பவிதா,
நிஜபோத விசாரணசாருமதே |
கலயேஸ்வர ஜீவ விவேக விதம்,
பவ சங்கர தேசிக மே சரணம் || 3.

பவ ஏவ பவாநிதி மே நிதராம்,
ஸமஜாயத சேதஸி கௌதுகிதா |
மம வாரய மோஹ மஹாஜலதிம்
பவ சங்கர தேசிக மே சரணம் || 4.

ஸுக்ருதேதிக்ருதே பஹுதா ,
பவதோ பவிதா ஸமதர்சநலாலஸதா |

அதிதீநமிமம் பரிபாலய மாம் ,
பவ சங்கர தேசிக மே சரணம் || 5.

ஜகதீமவிதும் கலிதாக்ருதயோ
விசரந்தி மஹாமஹஸச்சலத: |
அஹிமாம்சுரிவாத்ர விபாஸி குரோ
பவ சங்கர தேசிக மே சரணம் || 6.

குருபுங்கவ புங்கவகேதந நே
ஸமதாமயதாம் நஹி கோபி-ஸுதீ: |
சரணாகதவஸ்தல தத்வநிதே
பவ சங்கர தேசிக மே சரணம் || 7.

விதிதா ந மயா விசதைககலா
ந ச கிஞ்சந காஞ்சநமஸ்தி குரோ |
த்ருதமேவ விதேஹி க்ருபாம் ஸஹஜாம்
பவ சங்கர தேசிக மே சரணம் || 8.

ஸ்ரீசந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்ரீமஹாஸ்வாமி தோடகாஷ்டகம் (தமிழில்)

சங்கரம் போற்றி!
மறை யாவையும் போற்றிடும் சற்குருவே - அருட்
சாத்திர போதமும் உணர்த்தியவா |
இறை யாவையும் ஒன்றென போற்றியவா - சசி
சேகர சங்கரரே சரணம் ||
நிறை பாரதம் முழுவதும் நடைபயின்றே - செகம்
மேவிய துயரமும் கலைந்தனவா |
நிறை பூரண குணமுடை புண்ணியமே - சசி
சேகர சங்கரரே சரணம் ||
பிறை சூடிய சந்திர மௌளிபதம் - தினம்
பூசனை செய்தருள் பூதியமே |
வகை இல்லற நல்லறம் உணர்த்தியவா - சசி
சேகர சங்கரரே சரணம் ||
இடர் யாவையும் கலிதனில் போக்கியவா - வினை
யாவையும் நீக்கிடும் சந்திரரே |
சுடர் போலருள் நாயகன் ஆதியனே - சசி
சேகர சங்கரரே சரணம் ||
நினைந் தேயுனை அனுதினம் போற்றிடினும் - நிலை
ஏகிலடும் நல்வழி சுடரொளியே |
மனை ஏகிடு நன்னிலை பேரருளால் - சசி
சேகர சங்கரரே சரணம் ||
கொடி மேலுரு நந்தியும் கொள்சிவமாய் - நிறை
நாமமும் கொண்டொரு தூயவனே |

கதி யாமிங்கு நின்பதம் நாடினமே - சசி
சேகர சங்கரரே சரணம் ||
இருள் நீக்கிட பேரொளி பொங்கியவா - எமை
காத்திடும் பெருமிறை நாயகனே |
மருள் நீக்கிட நின்பதம் போற்றிடுவோம் - சசி
சேகர சங்கரரே சரணம் ||
கலி வென்றிட தோன்றிய சங்கரரே - குரு
நாயக மாயுரு கொண்டவரே |
கிலி யில்லை யுனைதினம் துதிப்பவர்க்கே - சசி
சேகர சங்கரரே சரணம் ||
பெரியவா சரணம்! பெரியவா சரணம்! ஸ்ரீ மஹா பெரியவா அபயம்!!

## ஸ்ரீமஹாபெரியவா கராவலம்ப துதி (தமிழில்)

மாயப் பிறப்பறுக்கும் குறுநகைக் கோமளமே
காயப் பிணிநீக்கும் கற்பகமே கண்ணொளியே
தூய மனதோடே நெறிதவறா வாழ்வுபெற
ஞான வொளியோடு நல்நயத்தை அருள்வோனே
காலைப் பொழுதிதனில் பொற்பதமும் பணிகின்றோம்
கச்சியம் பதியோனே கைதூக்கிக் காத்தருள்வாய் ! (1)

கலியின் வினைபோக்கும் கனிச்சொல் லறமுடனே
வலியின் துயர்போக்கும் தேமதுர வாக்காலே
கிலியும் விட்டொழிய கதியாயெமைக் காத்தருள
குருவாய் அருள்குணநிதியே குவலயத்தைக் காப்போனே
(காலைப் பொழுதிதனில்) (2)
தூயப் பொன்நிறமாய் கனிமார்பில் பூதியுமாய்
கச்சித் திருவனிதை சூடும்நல் குங்குமமும்
காணும் மனமதிலே மகிழ்வோடு மணம்சேர்ந்து
தேனினும் இனிதான தளிர்வாழ்வும் அருள்வோனே
(காலைப் பொழுதிதனில்) (3)
களிறாம் கஜராஜன் பெற்றதொரு முத்தியைபோல்
அறியா மாந்தருக்கும் அருளுகின்ற பேரொளியே
தளிராய் நற்கதியாய் கச்சியேகன் அருள்கூட்டி
நடையாய் களமெங்கும் சுற்றிவந்த பேரிறையே
(காலைப் பொழுதிதனில்) (4)
தண்டம் வலக்கரமும் கமண்டலம் இடக்கரமும்
அண்டம் காத்துவரக் கோடிதனில் உதித்தோனே
கண்டம் நீக்குமருட் கற்பகனாம் நின்னுருவை
சிந்தையிற் தாம்கொண்டே தியானித்தோம் குருபரனே
(காலைப் பொழுதிதனில்) (5)

உலகோர் குறைபொறுத்து குன்றாது வாழ்விக்க
உலகாள் சடையோனின் அவதாரப் பரம்பொருளே
நித்திரை கலைந்தெம்மை திருவடியின் அருள்பெறவே
நற்றிறை நாயகத்துச் சீரருளாய் வாய்த்தவனே

(காலைப் பொழுதிதனில்) (6)

ஒன்றாய் செவ்வுறவாய் கற்பகமாய் தோன்றியநல்
திருவின் திருத்தாளின் அருள்வேண்டிச் சரண்புகுந்தோம்
பலவாய் பல்பொருளாய் பரவெளியில் அருட்புரியும்
திருவின் திருவொளியாய் தரணிபெற்ற ஸ்ரீசரணா

(காலைப் பொழுதிதனில்) (7)

அகமும் புறமுந்தான் அனுதினமும் தூய்தொளிர
அகமும் நின்னுருவாய் நிறைந்தேக அருள்செய்வாய்
அகமும் மகிழ்ந்திடவே அமுதமெனத் திகழ்பவனே
அகமுள் நல்லமுதாய் ஆக்கிடும்உன் அருள்வேண்டி
அனுதினமுந் துதிசெய்தோம் ஆச்சார்ய சங்கரனே!
கச்சியம் பதியோனே கைதூக்கிக் காத்தருள்வாய் ! (8)

ஸ்ரீ ஸ்ரீ மஹா பெரியவாள் துணை

ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹா பெரியவாள் கராவலம்பம் ஸ்தோத்ரம்

ப்ராதஸ்மராமி பவதீய முகார விந்தம்
மந்தஸ்மிதம் ச ஜனிதா பஹாரம் ஜனனாம்
சம்பத்கரீம் ச பவதோத்ர கடாக்ஷ லக்ஷ்மீம்
காஞ்சீ மடேச மமதேஹி கராவலம்பம்

*(திருமுகத்தின் அழகு பவத்தை நீக்கும். குறுநகை பிறந்திட மக்களின் பிறவிப் பிணி தீர்ந்துவிடும். அருள்விழிப் பார்வையாலே பவவினை ஒழிந்து செல்வத்தை அருளும். இந்தக் குணாதிசயங்கள் நிறைந்த காஞ்சி மடத்தின் அதிபதியைக் காலையிலே நினைத்துத் துதிக்கின்றேன், என்னைக் கைத்தூக்கி அருளுமாறு வேண்டுகிறேன்.!)*

ப்ராதஸ்மராமி கலிதோஷ ஹராணி யாணி
ஹ்ருத்யானி த்வய மதுராணி மனோஹராணி
வாக்யானி தேத்ய வதனாம் புஜ நிர்கதானி
காஞ்சீ மடேச மமதேஹி கராவலம்பம்

*(கலிதோஷத்தை நீக்குபவரே! அருளிதயம் கொண்டு, அங்கிருந்து பிறக்கும் தங்கள் தேமதுரமான வாக்கின் மூலம் எங்கள் இதயத்தை மலரச் செய்பவரே! கதியற்றவரை தாமரை போன்ற அருள் விழிகளால் கடைத்தேற்றுபவரே! காஞ்சி மடத்தின் அதிபதியே! காலையிலே நினைத்துத் துதிக்கின்றேன். கை தூக்கி எனக்கருளுங்கள்.)*

வக்ஷஸ்தலம் விமலஹேம சமான வர்ணம்
பஸ்மாங்கிதம் ஜனமனோஹர குங்குமார்தம்
ப்ராதஸ்மராமி பவதோத்ர சிரம் மஹாத்மன்
காஞ்சீ மடேச மமதேஹி கராவலம்பம்

*(கலப்படமற்றத் தங்கத்தைப் போன்றப் பொன்னிறமானத் திருமார்பு முழுவதும் திருவெண்ணீற்றாலும், குங்குமத்தாலும் பூசி [பார்க்கின்ற] ஜனங்களின் மனதை இனிமையாக்குபவரே! எனது பவவினை தீர்ந்து என்னை மேலுயர்த்திச் செல்லக் காலையிலே நினைத்துத் துதிக்கின்றேன். காஞ்சி மடத்தின் அதிபதியே! கைதூக்கி எனக்கு அருளுங்கள்)*

மத்தேவ துல்ய கமனம் ச நிரீஷ்ய தேத்ய
யாத்வா வனாந்தர மனந்த கஜாச்சலீன:
ப்ராதஸ்மராமி கஜராஜ கதிம் தவேதம்
காஞ்சீ மடேச மமதேஹி கராவலம்பம்

*(நடையிலும், கூரிய பார்வையிலும், வனங்களில் திரிவதிலும் மத்தகஜத்தை ஒத்தவரே! கஜராஜனுக்கு நற்கதி அளித்ததுபோல எனக்கும் நல்கிட, காலையிலே நினைத்துத் துதிக்கின்றேன். காஞ்சி மடத்தின் அதிபதியே! கைதூக்கி எனக்கு அருளுங்கள் )*

தக்க்ஷேண தண்ட மவலப்ய ஸதைத்ய ரேண:
ஹஸ்தேன சாரு கலசம் ச விராஜ மானாம்
ரக்தாம்பரம் ச தவசாரு கடீஸ்மராமி
காஞ்சீ மடேச மமதேஹி கராவலம்பம்

*(வலக் கரத்தில் தண்டமும், இடக் கரத்தில் கமண்டலத்தையும் தாங்கி, ஒளிர்கின்ற ரக்த வர்ண மேலாடையை அணிந்து நிற்கும் திருக்கோலத்தை நினைத்துத் துதிக்கின்றேன். காஞ்சி மடத்தின் அதிபதியே! கைதூக்கி எனக்கு அருளுங்கள் .)*

விஸ்ம்ருத்ய தோஷமகிலம் ச ஸமமாப்ராதும்
த்ராதும் ச யாத்ய பகவன் க்ருதபக்த தீக்ஷா:
ப்ராதஸ்மராமி யதிபுங்கவ தேனுகம்பாம்
காஞ்சீ மடேச மமதேஹி கராவலம்பம்

*(குறைகளை, தோஷங்களை எல்லாம் மறப்பவரே! குற்றங்களை எல்லாம் மன்னிப்பவரே! அனைத்தையும் பொறுத்து பக்தர்களுக்கு அருட்பார்வை அளிக்கின்ற பகவானே! அருட்பாலைப் பொழிகின்ற உத்தமமான பசுவைப் போன்றவரே! காஞ்சி மடத்தின் அதிபதியே! கைதூக்கி எனக்கு அருளுங்கள் )*

ப்ராதஸ்மராமி பவதீய பதாரவிந்தம்
யஸ்மாத் ப்ராயந்தி துரிதாணி மஹாந்திதாணி
ஆயாந்தி தாணி முஹருத்ய சுமங்களானி
காஞ்சீ மடேச மமதேஹி கராவலம்பம்

*(எந்த மஹானுடைய திவ்ய சரணார விந்தங்களைத் துதித்தால், அனைத்துவிதமான மஹா துன்பங்களும் ஓடிவிடுமோ, ஸர்வ மங்களங்களும் தேடி ஓடிவருமோ,[அத்தகையப் பெருமை வாய்ந்த] காஞ்சி மடத்தின் அதிபதியே! கைதூக்கி எனக்கு அருளுங்கள்.)*

ஸ்னானாச்ச பானாச்ச நிஷேவனாச்ச
த்யானாச்ச பாபநிலயம் ப்ராயாந்தி
ஹேதீர்த்த பாதானு சர்வ பதம்தே

தீர்த்தம் ச தீர்த்தி சரணம் பஜாமி
காஞ்சீ மடேச மமதேஹி கராவலம்பம்

*(குளிக்கும்போதும், உண்ணும்[குடிக்கும்]போதும், தனியே] துதிக்கும்போதும், தியானம் புரியும்போதும், [எந்த] தீர்த்தபாதரை நினைத்துத் துதித்தால் ஸர்வ பாபங்களும் விலகி ஓடிவிடுமோ, [அவரை நினைந்து]ஸர்வ பதம் தந்தருள்க என வேண்டி, நல்வழி காட்டுக என இந்தத் தீர்த்தத்தால் துதிக்கிறேன். காஞ்சி மடத்தின் அதிபதியே! கைதூக்கி எனக்கு அருளுங்கள்.)*

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதீச்வர ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி அஷ்டோத்தரசத நாமாவளி:

1. ஓம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதீச்வராய நம:
2. ஓம் ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி குருப்யோ நம:
3. ஓம் ஸன்யாஸாச்ரம சிகராய நம:
4. ஓம் காஷாய தண்ட தாரிணே நம:
5. ஓம் ஸர்வபீடாபஹாரிணே நம:
6. ஓம் ஸ்வாமிநாத குரவே நம:
7. ஓம் கருணாஸாகராய நம:
8. ஓம் ஜகதாகர்ஷண சக்திமதே நம:
9. ஓம் ஸர்வ சராசர ஹ்ருதயஸ்தாய நம:
10. ஓம் பக்த பரிபாலக ச்ரேஷ்டாய நம:
11. ஓம் தர்ம பரிபாலகாய நம:
12. ஓம் ஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வத்யாசார்யாய நம:
13. ஓம் ஸ்ரீ விஜயேந்த்ர ஸரஸ்வதி பூஜிதாய நம:
14. ஓம் சிவ சக்தி ஸ்வரூபகாய நம:
15. ஓம் பக்த ஜன ப்ரியாய நம:
16. ஓம் ப்ரம்ம விஷ்ணு சிவைக்ய ஸ்வரூபாய நம:
17. ஓம் காஞ்சீ க்ஷேத்ர வாஸாய நம:
18. ஓம் கைலாஸ சிகர வாஸாய நம:
19. ஓம் ஸ்வதர்ம பரிபோஷ காய நம:
20. ஓம் சாதுர் வர்ண்ய ரக்ஷகாய நம:
21. ஓம் லோக ரக்ஷித ஸங்கல்பாய நம:
22. ஓம் ப்ரஹ்ம நிஷ்டாபராய நம:
23. ஓம் ஸர்வ பாப ஹராய நம:
24. ஓம் தர்ம ரக்ஷக ஸந்துஷ்டாய நம:
25. ஓம் பக்தார்ப்பித தன ஸ்வீகர்த்ரே நம:
26. ஓம் ஸர்வோபநிஷத் ஸாரஞ்ஞாய நம:
27. ஓம் ஸர்வ சாஸ்த்ர கம்யாய நம:
28. ஓம் ஸர்வ லோக பிதாமஹாய நம:
29. ஓம் பக்தாபீஷ்ட ப்ரதாயகாய நம:

30. ஓம் ப்ரம்மண்ய போஷகாய நம:
31. ஓம் நானாவித புஷ்பார்ச்சித பதாய நம:
32. ஓம் ருத்ராக்ஷ கிரிட தாரிணே நம:
33. ஓம் பஸ்மோத் தூளித விக்ரஹாய நம:
34. ஓம் ஸர்வக்ஞாய நம:
35. ஓம் ஸர்வ சராசர வ்யாபகாய நம:
36. ஓம் அநேக சிஷ்ய பரிபாலகாய நம:
37. ஓம் மனஸ்சாஞ்சல்ய நிவர்த்தகாய நம:
38. ஓம் அபய ஹஸ்தாய நம:
39. ஓம் பயாபஹாய நம:
40. ஓம் யக்ஞ புருஷாய நம:
41. ஓம் யக்ஞானுஷ்டான ருசிப்ரதாய நம:
42. ஓம் யக்ஞ ஸம்பன்னாய நம:
43. ஓம் யக்ஞ ஸஹாயகாய நம:
44. ஓம் யக்ஞ பலதாய நம:
45. ஓம் யக்ஞ ப்ரியாய நம:
46. ஓம் உபமான ரஹிதாய நம:
47. ஓம் ஸ்படிக துளஸீருத்ராக்ஷ ஹார தாரிணே நம:
48. ஓம் சாதுர்வர்ண்ய ஸமத்ருஷ்டயே நம:
49. ஓம் ருக் யஜுஸ் ஸாமாதர்வண சதுர்வேத ஸம்ரக்ஷகாய நம:
50. ஓம் தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபாய நம:
51. ஓம் ஜாக்ர ஸ்வப்ன ஸூஷுப்தயவஸ்வாதீதாய நம:
52. ஓம் கோடி ஸுர்யதுல்ய தேஜோமயசரீராய நம:
53. ஓம் ஸாதுஸங்க ஸம்ரக்ஷகாய நம:
54. ஓம் அச்வ கஜ கோ பூஜா நிர்வர்த்தகாய நம:
55. ஓம் குருபாதுகா பூஜா துரந்தராய நம:
56. ஓம் கனகாபிஷிக்தாய நம:
57. ஓம் ஸ்வர்ண பில்வதள பூஜிதாய நம:
58. ஓம் ஸர்வ ஜீவ மோக்ஷதாய நம:
59. ஓம் மூகவாக்தான நிபுணாய நம:
60. ஓம் நேத்ர தீக்ஷாதானாய நம:
61. ஓம் த்வாதசலிங்க ஸ்தாபகாய நம:
62. ஓம் கான ரஸஞ்ஞாய நம:
63. ஓம் ப்ரஹ்ம ஞானோபதேசகாய நம:
64. ஓம் ஸகலகலா ஸித்திதாய நம:
65. ஓம் சாதுவர்ண்ய பூஜிதாய நம:
66. ஓம் அநேகபாஷா ஸம்பாஷண கோவிதாய நம:
67. ஓம் அஷ்டஸித்திப்ரதாயகாய நம:
68. ஓம் ஸ்ரீ சாரதாமட ஸுஸ்திதாய நம:
69. ஓம் நித்தியான்னதான ஸுப்ரீதாய நம:
70. ஓம் ப்ரார்த்தனாமாத்ர ஸுலபாய நம:
71. ஓம் பாதயாத்ரா ப்ரியாய நம:

72. ஓம் நானாவிதமத பண்டிதாய நம:
73. ஓம் சுருதி ஸ்ம்ருதி புராணஞ்ஞாய நம:
74. ஓம் தேவ யக்ஷ கின்னர கிம்புருஷ பூஜ்யாய நம:
75. ஓம் ச்ரவணானந்தகர கீர்த்தயே நம:
76. ஓம் தர்சனானந்தாய நம:
77. ஓம் அத்வைதானந்த பரிதாய நம:
78. ஓம் அவ்யாஜ கருணா மூர்த்தயே நம:
79. ஓம் சைவவைஷ்ணவாதி மான்யாய நம:
80. ஓம் சங்கராசார்யாய நம:
81. ஓம் தண்ட கமண்டலு ஹஸ்தாய நம:
82. ஓம் வீணாம்ருதங்காதி ஸகலவாத்யநாத ஸ்வரூபாய நம:
83. ஓம் ராமகதா ரஸிகாய நம:
84. ஓம் வேத வேதாங்க ஆகமாதி ஸகலகலா ஸதஸ் ப்ரவர்தகாய நம:
85. ஓம் ஹ்ருதய குஹாசயாய நம:
86. ஓம் சதருத்ரீய வர்ணித ஸ்வரூபாய நம:
87. ஓம் கேதாரேஸ்வர நாதாய நம:
88. ஓம் அவித்யா நாசகாய நம:
89. ஓம் நிஷ்காம கர்மோபதேசகாய நம:
90. ஓம் லகுபக்திமார்கோபதேசகாய நம:
91. ஓம் லிங்கஸ்வரூபாய நம:
92. ஓம் ஸாலக்ராம ஸூக்ஷ்மஸ்வரூபாய நம:
93. ஓம் காலட்யாம் சங்கரகீர்த்திஸ்தம்ப நிர்மாண கர்த்ரே நம:
94. ஓம் ஜிதேந்த்ரியாய நம:
95. ஓம் சரணாகதவத்ஸலாய நம:
96. ஓம் ஶ்ரீ சைலசிகரவாஸாய நம:
97. ஓம் டம்ரிகநாத விநோதனாய நம:
98. ஓம் வ்ருஷபாரூடாய நம:
99. ஓம் துர்மதநாசகாய நம:
100. ஓம் ஆபிசாரிகதோஷ ஹர்த்ரே நம:
101. ஓம் மிதாஹாராய நம:
102. ஓம் ம்ருத்யுவிமோசன சக்தாய நம:
103. ஓம் ஶ்ரீசக்ரார்ச்சன தத்பராய நம:
104. ஓம் தாஸாநுக்ரஹ க்ருதே நம:
105. ஓம் அனுராதா நக்ஷத்ர ஜாதாய நம:
106. ஓம் ஸர்வலோக க்யாதசீலாய நம:
107. ஓம் வேங்கடேச்வர சரணபத்மஷ்டபதாய நம:
108. ஓம் ஶ்ரீ த்ரிபுரசுந்தரி ஸமேத ஶ்ரீ சந்திரமௌலீஸ்வர பூஜாப்ரியாய நம:

# காஞ்சீ பெரியவா அஷ்டக ஸ்தோத்ரம்
====================================

ஶ்ரீகுருப்யோ நம:

நமஸ்தேஸ்து குரு நாதம்
காஞ்சீ பீடம் ஸுரபூஜிதம்
திவ்ய ஞான அபய ஹஸ்தம்
காஞ்சீம் ஜகத்குரும் நமோஸ்துதே ‖ 1

நமஸ்தே சிவப்ரகாசம்
புத்திமதாம் வரிஷ்டம்
லோக சமஸ்தக பாப ஹரே
காஞ்சீம் ஜகத்குரும் நமோஸ்துதே ‖ 2

ஜ்யோதிர்மயம் தேஜோமயம்
ரோகவிநாசன மோக்ஷப்ரதம்
ஸர்வ துக்க நிவாரணம்
காஞ்சீம் ஜகத்குரும் நமோஸ்துதே ‖ 3

ஆபத்பாந்தவம் அனாத ரட்சகம்
சம்ஸார மமதைவதம்
ஸகல சோக விநாசனம்
காஞ்சீம் ஜகத்குரும் நமோஸ்துதே ‖ 4

சந்த்ர மௌலீஸ்வரப்ரிய
சத்குருநாதம் ப்ரத்யக்ஷமதைவதம்
ஸர்வ தரித்ர விநாசனம்
காஞ்சீம் ஜகத்குரும் நமோஸ்துதே ‖ 5

ஸுமனோகரம் அபார கருணா மூர்த்திம்
பரமாத்மபாவம் பக்த ஜன மித்ரம்
சௌபாக்ய தாயக ஹரே
காஞ்சீம் ஜகத்குரும் நமோஸ்துதே ‖ 6

பாஸ்கர ப்ரகாசம் லோக நாயகம்
பரப்ரும்ம ஸ்வரூபம் சுபம்
கைவல்ய நவநீத ஸாதனம்

காஞ்சீம் ஜகத்குரும் நமோஸ்துதே ‖ 7

ஞான சாகரம் க்ருபா சாகரம்
மந்தஹாஸ அரவிந்த ஸங்காச வதனம்
ஸத்ய சம்ரட்சணம் குரு அவதாரம்
காஞ்சீம் ஜகத்குரும் நமோஸ்துதே ‖ 8

ஜகத்குர அஷ்டக ஸ்தோத்ரம்
ய:படேதி பக்திமான் நர:
ஸர்வ மனோபீஷ்ட சித்திகரதேவம்
அஷ்ட சித்தி வரப்ரதம் ‖

ப்ராத: கால படேந் நித்யம்
ரோக சோக சாந்தியே
ஏக கால படேந் நித்யம்
பாப சத்ரு விநாசனம் ‖

த்விகாலம் ய:படேந் நித்யம்
ஆயு ஆரோக்ய ஸித்திம்
த்ரிகாலம் ய:படேந் நித்யம்
ஸர்வ கார்யேஷூ ஸித்திதம் ‖

ஸ்ரீ ஜகத்குரும் நித்ய ஸ்மரணார்த்தம்
ஸர்வ மங்களானி பவந்து.



# ஸ்ரீஜகத்குரு கவசம்

*தெய்வத்தொண்டர் கீதகிரி*

குருர் பிரம்மா
குருர் விஷ்ணு
குருதேவோ மஹேஸ்வரா
குரு சாக்ஷாத்
பரப்பிரம்மா
தஸ்மை ஸ்ரீ குருவே நமஹ

குருவே உந்தன் திருவடி சரணம்
பிரமனும் விஷ்ணுவும் ஈஸ்வரனும் ஆகி
அந்தப் பரப்பிரம்ம மாகவும்
காட்சியளிக்கும்
குருவே உந்தன் திருவடி சரணம்

ஜெய ஜெய சங்கர ஹர ஹர சங்கர

## ஜகத் குருவே சரணம்

கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாய் விளங்கும் ஸ்ரீ ஸ்ரீ ஜெகத்குரு சந்திர சேகர சரஸ்வதி ஸ்வாமிகளுக்கு விழா நடக்கின்றது.

நூறு ஆண்டுகள் கடந்து நுண்ணியிர்க் கெல்லாம் அருள் பாலிக்கும் அவரே பரம்பிரம்மம்.

இந்த ஞானியின் காலத்திலே நாமும் வாழ்கிறோம் என்றால் அதுவே நாம் பெற்ற பெரும் பாக்கியமாகும்.

அந்த மாபெரும் ஞானிக்கு இந்த "ஸ்ரீ ஜகத்குரு" கவசத்தை பாதகாணிக்கையாக்கி, பணிவுடன் வெளியிடுவதில் பெருமை கொள்கிறோம்.

இக்கவசத்தை பக்தியுடன் பாராயணம் செய்யும் அனைவருக்கும், குருவின் கருணை, சகல சௌபாக்கியங்களும் கிடைக்கும் என்பது திண்ணம்.

இந்த ஜகத்குரு கவசத்தை தினந்தோறும் பாராயணம் செய்து வந்தால், வீட்டில் செல்வம் கொழிக்கும்.

## "ஸ்ரீஜகத்குரு கவசம்"

காப்பு

உலகத்தின் குருதன்னை உருவாக்கித் தந்திட்ட
உலகத்தின் முதலோனே ஓம்கார கணபதியே
உலகத்தின் நலம் காக்க உருவான
"குரு கவசம்"
உலகத்தின் மாந்தர்தம் உளம் சேரநீ அருள்வாய்.

ஜெய ஜெய சங்கர ஹர ஹர சங்கர
ஹர ஹர சங்கர ஜெய ஜெய சங்கர

குருவே சரணம் குருவே சரணம்
திருவே அருளின் உருவே சரணம்

தெய்வக் குரலே திருவடி சரணம்
பெய்மைக் குன்றே மேலோய் சரணம்
தெய்வக் குரலே திருவடி சரணம்
மெய்மைக் குன்றே மேலோய் சரணம்

சங்கர பீடத்தின் சத்திய ஞானி
மங்கலம் தருக மனமே வருக

சகத்தினை காக்கும் சகத்குரு வருக
முகத்தினைத் தானும் முன்வந்து காக்க

கண்கள் இரண்டையும் கனக முனிகாக்க
கனிவுடன் எம்நெற்றி கருணை குருகாக்க

கன்னமிரண்டையும் காஞ்சி முனிகாக்க
காண்பரிய பேரொளி காக்க எம் வாயை

நாவில் அமர்ந்து நற்குருகாக்க
பாவில் மகிழ்ந்து பற்களைக் காக்க

செவிகள் இரண்டையும் சிவனடி காக்க
புவியின் குருவே நாசியைக் காக்க

தலைமைக் குரவே தலையினைக் காக்க
தவமுனி என்றும் புருவங்கள் காக்க

கலைகளின் ஞானி கழுத்தினைக் காக்க
தோள்கள் இரண்டும் தூயோன் காக்க

துன்பம் போக்கித் துணையே தருக
ஒன்பது கோளும் உன் அருளாலே

உயர்வாய் என்றும் எம்மைக் காக்க
மார்பை என்றும் மாமுனிகாக்க

கார் முகில் ஞானி கைகளைக் காக்க
இடுப்பை வயிற்றை எம் குருகாக்க

இடுக்கண்யாவும் நீக்கிக் காக்க
முதுகை என்றும் முழு முனி காக்க

முதுமைக்கரசன் முற்றும்காக்க
முழங்கால்கள் தனை முனிகுரு காக்க

வழங்கும் அருளால் வலத் தொடை காக்க
இன்னருள் புரிந்து இடத்தொடை காக்க

நின்னருள் என்றும் கால்களைக் காக்க
பாதமிரண்டும் பரமகுருகாக்க

வேதத்தின் உருவே வினைகளைத் தீர்க்க
எத்தனை பிழைகள் செய்திருந்தாலும்

அத்தனையும் தான் பொறுத்தே காக்க
பித்தன் செய்த குறைகள் எல்லாம்

சித்தன் நீயே சிரித்தே காக்க
குலகுரு எந்தன் குடும்பம் காக்க

நலமுடன் நாளும் நல்லருள் புரிக
தண்டம் ஏந்தும் தத்தவ ஞானி

கண்டம்வந்தால் கனிவுடன் காக்க
வில்வமும் துளசியும் விரும்பிடும் தேவன்

பல்வித வரங்கள் பக்தருக் கருள்க
செம்மை உடுத்தும் சீலன் என்றும்

இம்மை மறுமை இரண்டிலும் காக்க
மனையினில் என்றும் மங்கலம் பெருக

மாதவ ஞானி மகிழ்வாய் அருள்க
மனைவி குழந்தைகள் மகிழ்வாய் வாழ

மறைகளின் தேவ... மாண்புடன் அருள்க
பேசும் மொழியால் பெருமை கூற

பிள்ளையுள்ளம் கொண்டாய் அருள்க
காசும் பணமும் கைகளில் சேர

கண்ணில் தெரியும் தெய்வம் அருள்க
செய்யும் தொழில்கள் சிறப்பாய் விளங்க

சிவநெறிச் செல்வர் சீராய் அருள்க
உய்யும் வாழ்வில் உண்மைகள் துவங்க

உலகக்குருவே உவந்து காக்க
எதிரிகள் வந்து இடர்கள் தராமல்

எதிரினில் வந்து எம் குரு காக்க
விடு விடு விடு என வினைகள் ஓட

கிடு கிடு கிடு என கீர்த்திகள் கூட
அத்வைதத்தின் ஒளியே அருள்க

அருளும் பொருளும் தருக தருக
விழுப்புரம் தன்னில் அவதரித்த குரு

விரும்பியே எம்மை என்றும் காக்க
சிவனைப் போற்றும் செந்நிற உடையோன்

செல்வம் யாவும் சீராய்த் தருக
மாலைப் போற்றும் மாதவச் செல்வ

மனிதன் வாழும் நெறியினைச் சொல்க
காலனை வெல்லும் கனிவரம் தருக

காலடியில் தான் புகலிடம் தருக
வாதம் பித்தம் எனும் பல நோய்கள்

வந்தே எம்மை அண்டவிடாமல்
வேதம் காக்கும் விமலன் காக்க

விழுப்பொருளே உன் விழிகள் காக்க
பிணிகள் எம்மைப் பற்றி விடாமல்

பணி செய்யும் பரமாச்சாரியர் காக்க
காமாட்சியவள் கருணை செய்த

கலியுகத் தெய்வம், கற்பினைக் காக்க
சந்திரசேகர சரஸ்வதி குருவே

சரணம் சரணம் சரணம் சரணம்
மந்திரம் எல்லாம் சேர்ந்திடும் உருவே

மலரடி சரணம் சரணம் சரணம்
காலடிதேவன் பீடம் அமர்ந்தோய்

காலடி சரணம் சரணம் சரணம்
கவலைகள் எல்லாம் தீர்த்திட வருவாய்
கருணைக்கடலே தருவாய் வருவாய்

யாதும் அறிவாய் யாகக் கனலே
ஓதும் எந்தன் உள்ளம் வருவாய்

பூஞ்சிற்காலே புள்ளினம் ஆடும்
காஞ்சியில் வாழும் கனிமுகன் சரணம்

ஐந்திருப்பத்து ஆண்டுகள் கடந்த
ஆனந்த வடிவே அடியேன் சரணம்

ஜெகத் குரு நீயே கவசம் கவசம்
ஜெய ஜெய சங்கர சரணம் சரணம்

ஹர ஹர சங்கர சரணம் சரணம்.



நினைப்பவர் நினையாதார் உள்ளத்திலும் எண்ணத்திலும் நிற்கும் தெய்வம் நீரல்லவா
என்றென்றும் எனை இயக்கும் உயரிய பெரும் சக்தி உமது கருணையல்லவா!
எனை ஈன்ற தாயாக தந்தையாக குருவாக இருப்பதும் நீரல்லவா!
அனுதினமும் வந்து ஆசிகள் தருகின்ற குருநாதன் நீரல்லவா!

பொருள் யாவும் சேர புகழ் எங்கும் ஓங்க செய்வதுமும் செயலல்லவா!
இருள் யாவும் விலக மருள் எல்லாம் நீங்க வைப்பதுமும் அருள் அல்லவா!
நினைப்பவர் நினையாதார் உள்ளத்திலும் எண்ணத்திலும் நிற்கும் கண் கண்ட
நடமாடும் தெய்வம் நீரல்லவா!
நடமாடும் தெய்வமென வந்த மா முனியே
உடன் கூட வருகின்ற என் தாயே..
தொடர்ந்தே நான் உனைப் பாட அருள் தருவாய்
விரைந்தே உன் பதம் தந்து அருளிடுவாய்
தாய் தந்தையுடன் தரணிதனை காக்க
துளசி மாலை சூடி துயர் துடைக்க வந்தீரோ!
விபூதி குங்குமத்துடன் ருத்ராஷம் அணிந்து
வீதி உலா வந்தீரோ எம் காஞ்சி மகானே!
நம் எளிய வாழ்வுக்கு என்றும் துணை வரும் காஞ்சீ மகா ஜகத்குரு
கவசம் கவசம் கவசம் உம் நாமம் காஞ்சீ மகா ஜகத்குரு
உரைத்தால் கவசமாய் காக்கும் எந்நாளும் காஞ்சீ மகா ஜகத்குரு
சரணம் சரணம் சரணம் உம் பாதம் காஞ்சீ மகா ஜகத்குரு
சரணம் தந்திடும் துணை வரும் எந்நாளும் காஞ்சீ மகா ஜகத்குரு
எங்கெங்கே நான் இருந்திடும் போதிலும் காஞ்சீ மகா ஜகத்குரு
மறுநொடி நடப்பது இந்நொடி அறியேன் காஞ்சீ மகா ஜகத்குரு
மறுநாள் எப்படி நான் இங்கு சொல்வேன் காஞ்சீ மகா ஜகத்குரு
வருவன எல்லாம் நல்லவை ஆக காஞ்சீ மகா ஜகத்குரு
மனதினில் நினைப்பேன் உம் நாமம் உரைப்பேன்
வழித் துணையாக வருவாய் நீயும் காஞ்சீ மகா ஜகத்குரு
விழிகளில் வைத்தே காப்பாய் நாளும் காஞ்சீ மகா ஜகத்குரு
அழித்திடுவாயே என் வினை நீயும் காஞ்சீ மகா ஜகத்குரு
கழித்திடுவேனே உன்னை எண்ணி நானும் உரைப்பேன் உரைப்பேன் உன் திரு நாமம்
உருகியே அழைப்பேன் உன்னை எந்நாளும் கவசமாய் காத்திட விரைந்தே வருவாய்
காவலாய் இருந்தே நல்வழி தந்திடுவாய் காஞ்சீ மகா ஜகத்குரு!

தென்னாடுடைய பெரியவா போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி
சர்வக்ஞா சர்வவ்யாபி பெரியவா சரணம்
மாயப்பிறப்பறுக்கும் மஹா பெரியவா திருவடி போற்றி!

## ஓம் ஸ்ரீ மகாபெரியவா கவசம்

மகாபெரியவா கவசம் பாடிடவே மகாகணபதி அருள் புரிந்திடுவாய்
மகாஸ்வாமிகளாய் வந்துதித்த மகாகணபதி உன் தாளே சரண்
மகாலஷ்மி மைந்தன் சிரசை காக்க சுப்ரமண்யர் குமாரர் வதனம் காக்க
விழுப்புரத்தில் உதித்தவர் விழிகளை காக்க
அனுஷத்தில் தோன்றியவர் நெற்றியினை காக்க
சுவாமிநாதனாய் வந்தவர் செவிகளை காக்க

மனதிலே என்றும் மகாபெரியவா இருக்க
புத்தியை என்றும் மகாசூரியன் இயக்க
மலர் முகம் உடையவர்மலர்வாய் காக்க
நாராயணன் தான் நாவினை காக்க
நான்மறை வித்தகர் நாசியை காக்க
கருடவாகனன் தான் கழுத்தினை காக்க
தோடுடைய செவியன் தோளினை காக்க
தோகை மயில் வாகனன் தோலினை காக்க
வேதநாயகன் மார்பினை காக்க
பசுபதியானவர் வயிற்றினை காக்க
காஷ்ட மௌனப்பிரியர் கரங்களை காக்க
முக்கண் உடையவர் முன் பின் காக்க
முழங்கால் தொடைகளைமுருகவேள் காக்க
விரல்களைத்தான் விரிசடையோன் காக்க
பாதயாத்திரைப்பிரியர் பாதங்களை காக்க
அங்கங்கள் அனைத்தையும்,அபயகரத்தான் காக்க
எல்லா திசைகளிலும் காஞ்சிமகான் இருக்க
எல்லா பிணிகளையும்
என்றுமே ஓழிக்க காவி உடை தரித்து வந்த காமாஷி
எல்லோரையும் எப்போதும் எங்கும் காக்க காக்க காக்க
ஓம் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
மகாஸ்வாமிகள் திருவடிகளே
சரணம் சரணம் சரணம்

சிறுவாச்சூர் மதுரகாளிதாசன்

ஸ்ரீராம நவமி. அன்று ராமாயணம் படிக்க இயலாவிடின் சுருக்கமாக, ஒன்பது வரியில் உள்ள இந்த வரிகளைப் பாராயணம் செய்தால் மன அமைதி, மகிழ்ச்சி நிலவும். இதை தினமும் பாராயணம் செய்தால் ராமாயணம் முழுவதும் படித்த பலனைப் பெறலாம். எல்லா காரியங்களிலும் வெற்றி கிட்டும்.

‘ஸ்ரீராமம் ரகுகுல திலகம்
சிவதனுசாக் ருஹீத சீதா ஹஸ்தகரம்
அங்குல் யாபரண சோபிதம்
சூடாமணி தர்ஸன கரம்
ஆஞ்சநேயம் ஆஸ்ரயம்
வைதேஹி மனோகரம்
வானர ஸைன்ய ஸேவிதம்
சர்வ மங்கல கார்யானுகூலம்
சததம் ஸ்ரீராமசந்த்ரம் பாலயமாம்.